ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2375/21 - 2024 මාර්තු මස 12 වැනි අඟහරුවාදා - 2024.03.12

*2375/21 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீரியல் வளங்கள் கட்டளைச் சட்டம்***

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 31ஆ ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட சிலாபம் கடனீரேரி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத் திட்டம்*

**டக்ளஸ் தேவானந்தா,**
*கடற்றொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2024, மாச்சு 12.*

**ஒழுங்குவிதிகள்**

*புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள சிலாபம் கடனீரேரியில், சுற்றுச்சூழல் நிலையை உறுதியாகப் பேணுவதன் ஊடாக கடனீரேரி மற்றும் அதுசார்ந்து மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரத்தைப் பேணுதல் மற்றும் அதனை மேம்படுத்தும் நோக்குடன் இந்த சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், மூலதர்மங்கள் மற்றும் வழிமுறைகளை உள்ளடக்கி இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.*

*இந்த திட்டம் சிலாபம் கடனீரேரி இணை - பங்கேற்பு குழுவினால் அனுமதிக்கப்பட்ட பின் கடற்றொழில், நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பிய பின், இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட காரணம் மற்றும் அதிலுள்ள அனுகூலங்களை ஆராய்ந்து கடற்றொழில் அமைச்சரின் அனுமதிக்காக அனுப்பப்படும். (31ஆ பிரிவு)*

*அமைச்சரினால் இந்த திட்டத்துக்கு அனுமதி வழங்கிய பின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பின் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்தும் நிலைக்கு அமைக்கப்படும். (31ஆ 4 ஆவது பிரிவு)*

*61 ஆவது பிரிவின் கீழ் தகுந்த விதிமுறைகள் தயாரித்தல் மற்றும் 34 ஆவது பிரிவின் கீழ் பொருத்தமான அறிவித்தல் வெளியிடப்படுவதன் மூலம் அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்படும். (31ஆ 5 ஆவது பிரிவு)*

**01. சிலாபம் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவம் மற்றும் இணை-பங்கேற்பு குழு.**- 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் 2013 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் (திருத்திய ஒழுங்குவிதிகளுக்கு அமைய கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்ட குழு இதன் பின்னர் "சிலாபம் கடனீரேரி முகாமைத்துவ இணை-பங்கேற்பு (நல்லாட்சி) குழு" என அழைக்கப்படும். (இதன் ஆக்க அமைவு இணைப்பு இல. 01 ஆக தரப்பட்டுள்ளது.)

**02. சிலாபம் கடனீரேரி மீன்பிடி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ திட்டத்தை செயற்படுத்தும் பிரதேசம்.**- இலங்கையின் வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் மஹவெவ, மாதம்பே, சிலாபம் மற்றும் ஆராய்ச்சிக்கட்டு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபம் கடனீரேரி நீர்ப்பரப்பில் மற்றும் அது சார்ந்து இனம் காணப்பட்ட 30 கிராம அலுவலர் பிரிவுக்குரிய தரைப்பகுதி (2013 இன் 35 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் (திருத்திய) சட்டத்தின் கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசம் 31(1) ஆம் பிரிவின் அதிகாரப் பிரதேசம்) சிலாபம் கடனீரேரி முகாமைத்துவப் பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது.

பூகோள பகுதி - GPS தரவு அடங்கிய வரைபடத்தின் மூலம் சிலாபம் கடனீரேரிக்குள் அடையாளம் காணப்பட்ட அதிகாரப் பிரதேசம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இணைப்பு இல. 02)

சிலாபம் கடனீரேரியில் இனங்காணப்பட்ட தரைப்பகுதியின் எல்லையான மஹவெவ பிரதேச செயலகப் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு :

1. 531 A தொடுவாவ வடக்கு கிராம அலுவலர் பிரிவு ;
2. 532 இரணவில மேற்கு கிராம அலுவலர் பிரிவு ;
3. 521 A இரணவில கிழக்கு கிராம அலுவலர் பிரிவு.

சிலாபம் கடனீரேரியில் இனங்காணப்பட்ட தரைப்பகுதிக்கு எல்லையான மாதம்பே பிரதேச செயலகப் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு :

1. 560 பம்பல தெற்கு கிராம அலுவலர் பிரிவு ;
2. 560 A பம்பல கிராம அலுவலர் பிரிவு ;
3. 534 C கல்ஹிட்டியாவ கிராம அலுவலர் பிரிவு.

சிலாபம் கடனீரேரியில் இனங்காணப்பட்ட தரைப்பகுதிக்கு எல்லையான சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு :

1. 561 காக்கபள்ளி தெற்கு கிராம அலுவலர் பிரிவு ;
2. 562 அம்பகந்தவில கிராம அலுவலர் பிரிவு ;
3. 562 C வெலிஹேன கிராம அலுவலர் பிரிவு ;
4. 563 பஹல ஒளிதமுவ கிராம அலுவலர் பிரிவு ;
5. 566 மெருவல கிராம அலுவலர் பிரிவு ;
6. 566 B இனிகொடவில கிராம அலுவலர் பிரிவு ;
7. 566 C இனிகொடவில கிராம அலுவலர் பிரிவு ;
8. 575 A குருசுபாடு கிராம அலுவலர் பிரிவு ;
9. 575 C எகொடவத்த கிராம அலுவலர் பிரிவு ;
10. 576 அலுத்வத்த கிராம அலுவலர் பிரிவு ;
11. 576 A அலுத்வத்த கிராம அலுவலர் பிரிவு ;
12. 577 வெரலபட கிராம அலுவலர் பிரிவு ;
13. 578 A தெற்கு பிட்டிபன கிராம அலுவலர் பிரிவு ;
14. 578 B வடக்கு பிட்டிபன கிராம அலுவலர் பிரிவு ;
15. 579 வட்டக்கள்ளிய கிராம அலுவலர் பிரிவு ;
16. 579 B ததுறுஓயா கிராம அலுவலர் பிரிவு.

சிலாபம் கடனீரேரியில் இனங்காணப்பட்ட தரைப்பகுதிக்கு எல்லையான ஆராச்சிக்கட்டு பிரதேச செயலகப் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு :

1. 591 பத்துளுஓயா கிராம அலுவலர் பிரிவு ;
2. 590 ஆனைவிழுந்தாவ கிராம அலுவலர் பிரிவு ;
3. 589 சுருவில கிராம அலுவலர் பிரிவு ;
4. 585 B வைரவன்கட்டு கிராம அலுவலர் பிரிவு ;
5. 583 குசல கிராம அலுவலர் பிரிவு ;
6. 584 கோட்டே கிராம அலுவலர் பிரிவு ;
7. 582 கருக்குப்பண்ண கிராம அலுவலர் பிரிவு ;
8. 573 பங்கதெனிய கிராம அலுவலர் பிரிவு.

**03. சிலாபம் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவம் மற்றும் இணை-பங்கேற்பு குழுவின் தலையீட்டுடன் செயற்பட வேண்டிய பிரதான வழிமுறை.**- சிலாபம் கடனீரேரிக்குள் மற்றும் அது சார்ந்த பிரதேசங்களில் செயற்படுத்தக்கூடிய அல்லது செயற்படுத்த அல்லது செயற்படுத்த வேண்டிய செயற்பாடுகள்/அபிவிருத்தித் திட்டங்கள் அடங்கலான செயற்றிட்டங்கள் வருடாந்தம் தயாரிக்கும்போது திட்டத்தில் காட்டப்பட்டுள்ள மூலதர்மங்களுக்கமைய அமைத்து செயற்படுத்தல்.

சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்புக் குழுவின் சகல உறுப்பினர்களின் மற்றும் தரப்பினரான நிறுவனம், இந்தத் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டு தமது சேவைகளை மேற்கொள்ளல் மற்றும் தொடர்புடைய அனுமதி வழங்குதல் வேண்டும்.

**04. மூலதர்மம்.**- கடனீரேரி சூழல் தொகுதியின் வளங்கள், கடனீரேரி சூழல் தொகுதியில் உயிரியல் பல்வகைமையைப் பாதுகாத்தல், வனவிலங்குகள் மற்றும் பரம்பரைக்கிடையில் நியாயப்படுத்தலை முன்னெடுக்கும் வகையில் அறுவடை செய்தல், பயன்பாடு மற்றும் நுகர்வு தொடர்பான தீர்மானம் எடுப்பதும் இணை-பங்கேற்பு முகாமைத்துவ (நல்லாட்சி) குழுவின் மூலம் கீழ் குறிப்பிடப்படும் மூலதர்மங்களைத் தவிர தொகுதிக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- வளங்களை சமமாகப் பகிர்ந்தளித்தல்
- சட்டபூர்வமாக
- இணை-பங்கேற்பு/பிரதிநிதித்துவம்
- வெளிப்படைத் தன்மை
- சூழலுக்கு இணக்கமாக
- வினைத்திறன் மற்றும் வசதிகள்
- பொறுப்பு
- பொது இணக்கப்பாடு (சாதி, மத, மொழி, குலம், அரசியல் தொழிற்பலம் இன்றி)
- முறையான பொறுப்பு
- கூட்டாண்மை
- உறுதியாக வளங்களைப் பயன்படுத்தல்

**05. நிறுவன கட்டமைப்பு :**

**05.01 செயற்படுத்தும் முறை**

1. சிலாபம் கடனீரேரிக்குள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் கடனீரேரி மீனவர்களை உள்ளடக்கி 12 முகாமைத்துவக் குழுக்கள் உள்ளன. (1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 32 ஆவது பந்தியின் 3 ஆவது அட்டவணையின் கீழ் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் மீன்பிடிக் குழுக்களாகப் பிரகடனப்படுத்தும் 1772/29 ஆம் இலக்க 2012.08.22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு 03 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.)

| மீன்பிடி முகாமைத்துவக் குழு | பதிவிலக்கம் |
|---|---|
| 1.1 முத்துப்பந்தி கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/01 |
| 1.2 நகுல்எலிய கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/02 |
| 1.3 அலுத்வத்த கார்மேல் மாதா கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/03 |
| 1.4 பளுகஸ்வத்த கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/04 |

| மீன்பிடி முகாமைத்துவக் குழு | பதிவிலக்கம் |
|---|---|
| 1.5 வெலிஹேன கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/05 |
| 1.6 மாரவில புனித ஜோசப் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/06 |
| 1.7 இரணவில கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/07 |
| 1.8 அம்பகந்தவில கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/08 |
| 1.9 தாளடியவெல்ல கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/09 |
| 1.10 பம்பல புனித செபஸ்தியன் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/10 |
| 1.11 கருக்குப்பண்ண கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/11 |
| 1.12 புனித மைக்கேல் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு | திஜதெ/தீ. கமிட்டு/கலா/க/12 |

2. கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழுக்கள் 12 உம் தனித்தனியாக ஒவ்வொரு மாதத்துக்கும் ஒருமுறை இணக்கம் காணப்படும் நாட்களில் கூட்டம் கூடும்.

3. கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழுக்கள் 12 இற்குள் நியமனத் தர நிலையிலிருந்து ஒரு குழுவிலும் ஒரு உறுப்பினர் வீதம் 12 உறுப்பினர்கள் சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்பு முகாமைத்துவ (நல்லாட்சி) குழுவில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது.

4. கடனீரேரி முகாமைத்துவக் குழுக்கள் 12 இன் வருடாந்த பொதுச்சபை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதத்தில் கூடும்.

5. சிலாபம் கடனீரேரி மீன்பிடிக் குழுக்கள் 12 இன் பிரதிநிதித்துவத்துடன் 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக 2013 இன் 35 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திருத்திய ஒழுங்குவிதிகளின் ஒதுக்கீட்டுக்கு அமைய சிலாபம் கடனீரேரிக்கு இணை-பங்கேற்புக் குழுவின் நல்லாட்சி அமைக்கப்படும். அதன் கட்டமைவு இணைப்பு இல. 01 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்புக் குழு ஒவ்வொரு 03 மாதத்துக்கு ஒரு முறை நடைபெறுதல் வேண்டும். அத்துடன் மாவட்டத்தின் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அதற்கு அழைப்பாளராக செயற்படுவதுடன் மாவட்டச் செயலாளரின் தலைமையில் இது நடைபெறுதல் வேண்டும்.

7. அத்தியாவசிய தேவையின்போது அக்குழு குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் கூட்டம் நடாத்தலாம்.

7.1 நிறுவன கட்டமைப்புக்குள் தீர்மானிக்கும் முறை

1. கடனீரேரியில் நீர்வாழின வளங்களை அறுவடை செய்தல், பயன்படுத்தல் மற்றும் கையாளுவது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் நடைமுறை கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு மற்றும் சிலாபம் இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவின் மூலம் இந்தத் திட்டத்துக்குள் இனம் காணப்பட்ட கொள்கை மற்றும் இணக்கப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்பு மீன்பிடி முகாமைத்துவக் குழுவின் தலைவராக புத்தளம் மாவட்டச் செயலாளர் செயற்படுவார்.

3. கடனீரேரிக்குள் மீன்பிடி செயற்பாடு மேற்கொள்வது பற்றி கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு மற்றும்/ அல்லது கடற்றொழில் அதிகாரியினால் கண்காணிக்கப்படல் வேண்டும். அதில், யாதேனும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தோன்றுமானால், அதனை சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்பு மீன்பிடி முகாமைத்துவக் குழுவுக்கு முன்வைத்தல் வேண்டும்.

4. சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவுக்கு, சிலாபம் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழுக்களின் முன்மொழிவைச் சமர்ப்பிக்கும்போது, சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்மொழிவு தொடர்பாக ஒவ்வொரு கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழுவின் பெரும்பான்மை சம்மதத்தை வழங்குவதன் பேரில் முன்மொழிவை ஏற்றுக்கொண்டு சிலாபம் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் தீர்மானத்துக்கு விடுதல் வேண்டும்.

5. சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்துக்கு சிலாபம் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு மற்றும் ஏனைய தரப்பினரினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவுக்குள் (இல. 7.2.1 இன் கீழ்) குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளுக்கு அமைய கலந்துரையாடுதல் வேண்டும்.

6. கடனீரேரி சூழல் தொகுதிக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தில் அபிவிருத்தி முன்மொழிவு சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவின் அங்கத்துவ நிறுவனம் அல்லது தரப்பினருக்குத் தேவையான அனுமதி மற்றும் கலந்துரையாடலுக்குச் சமர்ப்பித்து அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்தும்போது, சிலாபம் இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவின் தேவையான அனுமதி முதலாவதாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6.1 இந்த அனுமதி வழங்கும்போது செயற்றிட்டம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (சுற்றாடல் தாக்க மதிப்பீடு/சுற்றாடல் பரிந்துரை அறிக்கை ஒன்று) பெற்றுக்கொள்வதற்கும் இதன் பின்னர் சம்பந்தப்பட்ட அறிக்கையில் பரிந்துரை சிலாபம் கடனீரேரி மீன்பிடி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவின் தொழில்நுட்பக் குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.2 குறித்த செயற்றிட்டத்துக்கு மட்டும் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பக் குழு சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களுக்கிடையே நியமனம் குழுவினால் மேற்கொள்ள வேண்டும்.

7. சிலாபம் கடனீரேரி மீன்பிடி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவுக்குரிய கடனீரேரி தொடர்பான பிரதான இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல் வேண்டும். அத்துடன் திட்டத்தைச் செயற்படுத்தல், கண்காணித்தல், ஒழுங்கமைப்பு மற்றும் பின்விபரங்களுக்கு சிலாபம் கடனீரேரி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**06. கடனீரேரியின் பாதுகாப்பான இயற்கை வளம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு.**- கடனீரேரி முகாமைத்துவ அதிகாரப் பிரதேசத்துக்குள் உள்ள தரைப்பகுதி/கடனீரேரி நீர், மீன்கள், பறவைகள் அதிலுள்ள நீர் வளங்கள் மற்றும் ஏனைய நீர்வாழிகள் மற்றும் இனம்காணப்பட்ட தீவுகள் அடங்கலாக கண்டத்தாவர சூழற் தொகுதியிலுள்ள சகல தாவரங்களும் பிரசைகளின் சிலாபம் கடனீரேரிக்குரிய இயற்கை வளங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

1. கடனீரேரி முகாமைத்துவப் பிரதேசத்துக்குள் அங்குள்ள கண்டத் தாவரங்களை அழித்தல் கூடாது. அவ்வாறு அழிக்கப்பட்டால் முறையாக மீண்டும் கண்டத் தாவரங்களை நடுதல் வேண்டும்.

2. கழிவுப் பொருட்களை வெளியேற்றல் வேண்டும் :

i. கடனீரேரிக்கு அண்மித்த இறால் பண்ணைகளுக்கு கடனீரேரிக்கு நீர் விடும்போது இரு வாரங்களுக்கும் குறைவான காலத்தில் பண்ணையில் உள்ள வண்டல் தொட்டிகளில் களஞ்சியப்படுத்தி கடனீரேரிக்கு விடுதல் வேண்டும்.

ii. விலங்குப் பண்ணைகள், தொழிற்சாலைகள், ஹோட்டல், வீடுகள், படகுகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் வெளியேற்றப்படும் கழிவு நீர் அல்லது திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரதேசத்துக்குள் விடுதல் ஆகாது.

iii. உணவுக்காக எடுக்கும் மீன்களைத் தவிர ஏனைய சகல உயிரினங்கள் அல்லது உயிரற்ற வளங்கள் சிலாபம் இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவின் அனுமதியுடன் அல்லது அனுமதியின் பேரில் ஆய்வு செய்தல்/கையாளுதல்/அழித்தல்/நிரப்புதல் போன்ற விடயங்களுக்காக கவனம் செலுத்தப்படுவதுடன் இவ்வாறான எவ்வித செயற்பாடுகளும் கடனீரேரி பிரதேசத்துக்குள் மற்றும் பாதுகாப்புப் பிரதேசத்துக்குள் மேற்கொள்ளலாகாது.

3. **சிலாபம் கடனீரேரியின் அண்மித்த பிரதேசம் பிரகடனப்படுத்தல்.**- ஏற்கனவே கடனீரேரிக்கு அண்மித்த பிரதேச சிலாபம் கடனீரேரி மீன்பிடி கடனீரேரி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவுக்கு பெயரிடப்படுவதுடன் அப்பிரதேசங்களில் எவ்வித மீன்பிடி நடவடிக்கையிலும் ஈடுபடுதலாகாது.

**07. சிலாபம் கடனீரேரியில் ஈடுபடக்கூடிய மற்றும் ஈடுபட முடியாத நடவடிக்கைகள் மற்றும் வரையறை :**

1. சிலாபம் கடனீரேரி மீனவர்களின் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள 12 கடனீரேரி முகாமைத்துவக் குழுக்களின் உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு மட்டும் கடனீரேரியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

2. எனினும், மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீன்பிடிப் படகுகள் மற்றும் செயற்பாடு 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்துக்கு அமைவாக பதிவு செய்யும்போது அனுமதிப்பத்திரம் பெற்று அதன் பதிவிலக்கத்தை முறையாக படகில் எழுதப்பட்டு சம்பந்தப்பட்ட மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியும்.

3. கடனீரேரியில் மேற்கொள்ளக்கூடிய மீன்பிடி நடவடிக்கை தொடர்பாக மீன்பிடிப் படகு பயன்படுத்தினால், அதற்கு இயந்திரம் அற்ற மீன்பிடிப் படகினைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியும்.

4. கடனீரேரியில் ஈடுபடக்கூடிய மீன்பிடி தொழில்முறை -

1. தொங்கவிடும் வலைகளின் (செவுள் வலை) கண்ணளவு 1 1/2 அங்குலத்தை விட குறைவாக இருத்தலாகாது. அத்துடன் பயனுள்ள உச்ச கண்ணளவு 3000 கண்கள் நீளமுடைய 10 பீஸ்களாகும். கடனீரேரியில் தொங்கவிடும் வலையின் (செவுள் வலை) மூலம் தொழில் மேற்கொள்ளக்கூடியது மாலை 4.00 மணியிலிருந்து காலை 6.00 வரையாகும்.

2. கடனீரேரியில் தொங்கவிடும் முறுக்கு வலைகளின் கண்ணளவு 1/2 அங்குலத்தை விடக் குறையாது இருத்தல் வேண்டும். இறால் பிடிப்பதற்கு விரிக்கக்கூடிய உச்ச கண்ணளவு 3000 கண்கள் நீளமுடைய 20 பீஸ்களாகும். மேலும் ஏனைய மீன்களைப் பிடிப்பதற்கு தொங்கவிடும் வலையின் கண்ணளவு 2 1/2 அங்குலத்தை விடக் குறையாது இருப்பதுடன், விரிக்கக்கூடிய உச்ச கண்ணளவு 3000 கண்கள் நீளமுடைய 12 பீஸ்களாகும். கடனீரேரியில் முறுக்கு வலை பயன்படுத்தக்கூடிய நேரம் மாலை 4.00 மணியிலிருந்து காலை 6.00 வரையாகும்.

3. பம்பல, மாரவில, கருக்குப்பன்ன கடனீரேரி முகாமைத்துவக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மட்டும் இங்கு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியும். ஒரு மீன் கொட்டின் சுற்றளவு 25 கயிறு (...... மீற்றர் மூலம் குறிப்பிடல் வேண்டும்) இற்கு மேற்படாது இருத்தல் வேண்டியதுடன் ஒருவருக்கு செயற்படுத்தக்கூடிய மீன் அத்துக்களின் எண்ணிக்கை 08 இற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

4. வீச்சு வலை, நண்டு வலை, தூண்டல் வலை மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடு நாளின் எந்நேரத்திலும் மேற்கொள்ள முடியும்.

5. அலுத்வத்த கார்மேல் மாதா மீன்பிடிக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுக்கு மட்டும் கட்டு வலை மீன்பிடித் தொழில் தொடர்பாக குறப்பிட்ட நாட்களில் மட்டும் மேற்கொள்ள முடியும்.

6. கடனீரேரி முகவத்துவாரத்திலிருந்து வடக்கே அமைந்துள்ள ஒல்லாந்த கால்வாய் முத்துப்பந்தி வரை யாதேனும் முகாமைத்துவத்தின் அனுமதியுடன் கூடு வலை அமைக்க முடிவதுடன் கூடு வலை ஒன்றை அமைக்கும்போது கால்வாயின் மத்தியில் 03 மீற்றர் வரையான வெற்று நிலம் இருத்தல் வேண்டும்.

7. மேலும், சிலாபம் நீரேரிக்குள் நண்டுத் தட்டு பயன்படுத்தும்போது அதன் மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையில் சிப்பி தரையிறக்கும் செயற்பாடுகள், கண்டத் தாவரம் உள்ள பிரதேசங்களுக்கு அப்பால் கைமுறையாக மீன்பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ள முடியும். நீரில் அடித்து கலக்கி மீன்களைப் பயமுறுத்தி மீன்பிடிக்கும் நடவடிக்கையை கடனீரேரியின் வாயிலிருந்து இதிகொடவெல, பஹல ஒலிதலுவ கிராம அலுவலர் பிரிவுகளில் தொடங்கி கடனீரேரியின் தெற்குத் திசை வரையுமே மேற்கொள்ள முடியும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக வேறு எந்தவொரு மீன்பிடி நடவடிக்கையிலும் சிலாபம் கடனீரேரி மீன்பிடி சிலாபம் கடனீரேரி மீன்பிடி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவின் அனுமதியின்றி சிலாபம் கடனீரேரிக்குள் மேற்கொள்ள முடியாது. (தேசிய நீரியல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபடுவது ஏற்புடையதன்று)

9. நீர்வாழ் உயிரினச் செய்கை :

1. கூடுகளுக்குள் மீன் வளர்த்தல் -

I. கடனீரேரியில் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களுக்கு மட்டும் கடனீரேரியில் கூடுகளில் மீன் வளர்ப்பில் ஈடுபட முடியும்.

II. சம்பந்தப்பட்ட குழுவின் பரிந்துரையின் பேரில் சிலாபம் இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவின் அனுமதியைப் பெற்ற பின் கூடுகளில் மீன் வளர்ப்பை மேற்கொள்ள முடியும்.

III. சிலாபம் கடனீரேரி மீன்பிடி இணை-பங்கேற்பு முகாமைத்துக் குழுவின் அனுமதி கிடைத்த பின் இதற்காக இலங்கை தேசிய நீர்வாழின் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**08. சிலாபம் கடனீரேரியில் மீன்பிடிப் படகுகள் நிறுத்தி வைக்கும் படகுத்துறை :**

1. முத்துப்பந்தி கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு கிராம அலுவலர் பிரிவு ஆனவிழுந்தான் இல. 590.
   - சனசமூக நிலையத்துக்கு அருகில் படகுத்துறை
2. நகுல்எலிய கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு கிராம அலுவலர் பிரிவு ஆனவிழுந்தான் இல. 590.
   - பள்ளிக்கு அருகில் உள்ள படகுத்துறை
   - வைரவன்கட்டு கிராம அலுவலர் பிரிவு வைரவன்கட்டு இல. 585B.
3. கருக்குப்பண்ண கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு - கிராம அலுவலர் பிரிவு கருக்குபண்ண இல. 582.
   - பெரிய கருக்குப்பண்ண
   - மெதபாடு (பள்ளிக்கு அருகில்)
   - சின்னகருக்குப்பண்ண
4. தாளடிவெல்ல கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு - கிராம அலுவலர் பிரிவு எகெடவத்த 575C, குருசபாடு இல. 575A
   - தாளடிவெல்ல படகுத்துறை
5. அலுத்வத்த கார்மேல் மாதா கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு கிராம அலுவலர் பிரிவு, அலுத்வத்த இல. 576, அலுத்வத்த 576A, மைக்குளம் 566B.
   - அலுத்வத்த படகுத்துறை
   - வடக்கு பிட்டிபண பள்ளிக்கு எதிரேயுள்ள பழைய வள்ள படகுத்துறை
   - மைக்குளம்
6. மருவல புனித ஜோசப் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு கிராம அலுவலர் பிரிவு, மருவல இல. 566
   - மருவல ஜனபதய 1
   - மருவல ஜனபதய 2
   - மருவல ஜனபதய 3
   - ஹரிந்திர பிரதேசம்
7. பம்பல புனித செபஸ்தியன் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு கிராம அலுவலர் பிரிவு, பம்பல வடக்கு இல. 560A
   - பொது மயான பூமிக்கு எதிரே மூலையில்
   - சர்வோதய வீதி மூலையில்
   - சிறு மீனவ சம்மேளனத்துக்கு அருகில்

8. வெலிஹேன புனித அந்தோனி கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு கிராம அலுவலர் பிரிவு, ஹெலிஹேன தெற்கு இல. 562A

- புனித அந்தோனி படகுத்துறை, வெலிஹேன
- ரஜவத்த படகுத்துறை, ஹெலிஹேன

9. பலுகஸ்தென்ன கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு கிராம அலுவலர் பிரிவு, வெலிஹேன தெற்கு, இல. 562A

- வொசிங்டன் பாம் படகுத்துறை
- தித்தயா படகுத்துறை (பழைய படகுத்துறை)

10. அம்பகந்தவில கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு கிராம அலுவலர் பிரிவு, அம்பகந்தவில இல. 562

- சரப்புவத்த படகுத்துறை
- ரியன்சி பாம் படகுத்துறை
- அம்கந்தவில படகுத்துறை
- கங்கொட படகுத்துறை

11. இரணவில கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழு கிராம அலுவலர் பிரிவு, இரணவில மேற்கு, இல. 532, தொடுவாவ வீதி, இல. 531A

- சமுதுகம படகுத்துறை
- மீனவ கிராம படகுத்துறை
- தொடுவாவ வடக்கு

ஒவ்வொரு படகுத்துறைகளில் செயற்படும் படகுகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்த முடியும்.

**09. சிலாபம் கடனீரேரி மீன்பிடி அபிவிருத்தி முகாமைத்துவத் திட்ட சபைக்கு திருத்தம் முன்வைத்தல்.-** சிலாபம் கடனீரேரி மீன்பிடி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவினால் இந்த கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத் திட்டம் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை, பின்விபரம் மேற்கொள்ளப்பட்டு திருத்தங்கள் மற்றும் முன்மொழிவுகள் திட்டங்களை உள்ளடக்கல் வேண்டும். அமைப்பு மற்றும் வருடாந்த செயற்பாடுகளின் திட்டங்களும் உள்ளடக்க வேண்டும். அவ்வாறு உள்ளடக்கப்பட்ட திருத்தங்கள், முன்மொழிவுகள் குழுவினால் அனுமதிக்கப்பட்ட பின் கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பும்போது சிலாபம் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ விதிக்கோவையின் உள்ளடக்கல் வேண்டும்.

**10. சிலாபம் கடனீரேரி மீன்பிடி அபிவிருத்தி முகாமைத்துவத் திட்ட சபைக்கு திருத்தம் முன்வைத்தல்.-** சிலாபம் கடனீரேரி மீன்பிடி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவினால் இந்த கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத் திட்டம் வருடாந்த பின்விபரம் மேற்கொள்ளப்பட்டு, அமைப்பு மற்றும் வருடாந்த செயற்பாடுகளின் திட்டங்களும் உள்ளடக்க வேண்டும்.

இணைப்பு - 01


2013 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தி 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் (திருத்திய) சட்டத்தின் 31அ ஆம் பிரிவின் 1 ஆம் மற்றும் 2 ஆம் அட்டவணைகளின் கீழ் அமைக்கப்பட்ட சிலாபம் கடனீரேரி மீன்பிடி இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவினால் குழுவில் உள்ளடக்க வேண்டிய அதிகாரிகளின் பட்டியல் பின்வருமாறு :

மேற்குறித்த 31அ ஆம் பிரிவின் 1 ஆம் மற்றும் 2 ஆம் அட்டவணைகளுக்கு அமைய இணை-பங்கேற்புக் குழு பணிப்பாளர் நாயகத்தினால் இணை-பங்கேற்பு முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்படும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு பின்வரும் அதிகாரிகளுக்கிடையில் நிறுவனப்பட வேண்டும்.

1. மாவட்டச் செயலாளர் - புத்தளம்
2. மாவட்ட கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அதிகாரிகள் இருவர்
3. பிரதேச செயலாளர் - மஹவெவ
4. பிரதேச செயலாளர் - மாதம்பே
5. பிரதேச செயலாளர் - சிலாபம்

6. பிரதேச செயலாளர் - ஆராச்சிக்கட்டு
7. தலைவர், பிரதேச சபை - நாத்தாண்டிய
8. தலைவர், பிரதேச சபை - சிலாபம்
9. தலைவர், நகர சபை - சிலாபம்
10. தலைவர், பிரதேச சபை - ஆராச்சிக்கட்டு
11. நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
12. பணிப்பாளர் - வடமேல் மாகாண கடற்றொழில் அமைச்சு
13. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
14. இலங்கை தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
15. இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
16. வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
17. வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
18. வன பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
19. வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
20. சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
21. காணி அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
22. இலங்கை சுற்றுலாத்துறை அதிகார சபையின் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
23. பிரதிப் பொலிஸ் அதிகாரியினால் (வடமேல் மாகாணம்) பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
24. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர் குறிப்பிடப்படும் அதிகாரி ஒருவர்
25. கடற்படை கட்டளையிடும் தளபதியினால் (வடமேல் மாகாணம்) பெயர் குறிப்பிடப்படும் இலங்கை கடற்படை அதிகாரி ஒருவர்
26. மாகாண சபை ஆணையாளர் (வடமேல் மாகாணம்)
27. சிலாபம் பாரம்பரிய கட்டு வலை பெல்லே சங்கத்தின் பிரதிநிதி ஒருவர்
28. பம்பல சிறு மீனவ சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர்
29. சிலாபம் செடெக் அமைப்பின் பிரதிநிதி ஒருவர்
30. இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி ஒருவர்
31. சிலாபம் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவக் குழுவின் சார்பில் 12 உறுப்பினர்கள். ஒவ்வொரு குழுவிலிருந்து ஒரு பிரதிநிதி வீதம் 12 பேர்

இணைப்பு 02


Map of Chilaw Lagoon
Scale - 1:100,000
N
Legend
Main Road
Railway
Tank
River / Stream
Chilaw
Town Name
Important Place
Sea
Battulu Oya Junction
Wewa
Anavulundawa Wewa
Rathambala Oya
Suruwila Wewa
Aluth wewa
Sengal Oya
Arachchikattuwa Junction
Karukkuliya Wewa
B048
Bambiwila Wewa
Bangadeniya Junction
Deduru Oya
A003
Thimbilla Wewa
Munneswarama Wewa
B079
Kokkavila Junction
Yoda Ela
Chilaw
Karawita Wewa
B178
Chilaw Lake
Kakkapalliya Junction
Walahena Wewa
Thambagalla Junction
B432
B059
B247
Uraliyagara Junction
SRI LANKA
Chilaw Lagoon
Prepared by : Special Mapping Unit , Survey Department , Sri Lanka.

*இணைப்பு 03*

### *1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் கட்டளைச் சட்டம்*

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் ஆக்கப்பட்ட அறிவித்தல்.*

*அறிவித்தல்*

2012.02.08 ஆந் திகதிய 1744/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமான பத்திரிகையில் வெளியிடப்பட்ட சிலாபம் கடனீரேரி கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசத்தில் கீழ் குறிப்பிடப்படும் கடற்றொழில் குழுக்கள் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் அறியத் தருகிறேன்.

| *கடறறொழில் குழுவின் பெயர்* | *பதிவு இலக்கம்* |
|---|---|
| 1. முத்துப்பந்திய கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா.. கமி./01 |
| 2. நகுலஎலிய கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./02 |
| 3. அலுத்வத்த கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./03 |
| 4. பளுகஸ்தன்ன கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./04 |
| 5. வெலிஹேன கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./05 |
| 6. மரவல புனித ஜோசப் கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./06 |
| 7. கிழக்கு இரணவில கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./07 |
| 8. அம்பகந்தவில கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./08 |
| 9. தாளடியவெல்ல கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./09 |
| 10. பம்பல புனித செபஸ்தியன் கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./10 |
| 11. கருபனே கடற்றொழில் கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./11 |
| 12. புனித மிகாசெல் கடற்றொழில் கடனீரேரி முகாமைத்துவ குழு | திஜதெ/தி. கமிட்டு/ஹலா. கமி./12 |

**என். டி. ஹெட்டியாராச்சி,**
பணிப்பாளர் நாயகம்,
கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்.

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்,
புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10,
2012, ஓகத்து 15.

EOG 03-0115

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.